[23rd January 1961

Block Development

***95 Q.—SRI N. R. THIAGARAJAN :** கனம் முதலமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நமது ராஜ்யத்தில் உள்ள எல்லா பிளாக்குகளிலும் 1959 ஏப்ரல் 1-ம் தேதி முதல் 1960 மார்ச் முடிய செலவான தொகை எவ்வளவு ?

THE HON. SRI C. SUBRAMANIAM : The total expenditure was—

		RS.
Non-Loan	... ...	2,59,06,810
Loan	... ...	1,21,84,488
	Total ...	3,80,91,298

SRI N. R. THIAGARAJAN : பிளாக்குகளில் பணம் செலவு ஆனதில் சென்ற ஆண்டுக்கும் இந்த ஆண்டுக்கும் வித்தியாசம் இருக்கிறதே இதற்கு காரணம் என்ன? சில பிளாக்குகளில் ஒதுக்கப்பட்ட பணத்திற்குமேல் செலவாகியிருக்கிறது, சில பிளாக்குகளில் ஒதுக்கப்பட்ட பணத்தில் குறைவாக செலவு செய்யப்பட்டிருக்கிறது. குறிப்பாக எங்கள் ஆண்டிவட்டம் பிளாக்கில் 12 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருந்தும் 2 லட்சம் ரூபாய் தான் செலவு செய்திருக்கிறார்கள். இவ்விதம் இருக்கின்ற ஏற்றத் தாழ்வுகளை நீக்க அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இது பொதுவான ஒரு கேள்வி. தனிப்பட்ட ஒவ்வொரு இடத்தைப்பற்றியும் தனியாக கேள்வி கேட்டால் பதில் சொல்லலாம்.

Discourses on Ramayana and Mahabaratha

***96 Q.—SRI S. M. ANNAMALAI :** கனம் முதலமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சமுதாய நலத்திட்டப் பகுதிகளில் இராமாயணத்திலும், மகா பாரதத்திலும் நன்றாக உபந்நியாசம் செய்பவர்களுக்கு உதவி செய்யும்படி சமஸ்கிருத கமிஷன் சிபார்சு செய்துள்ளதா ?

(இ) அப்படியானால், அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) and (இ) The Sanskrit Commission had recommended the employment of the exponents of Ramayana, Mahabaratha, etc., in the Blocks with a view to inculcate among the masses, the proper ideals of conduct and character. Reports on the recommendation have been called for from the Collectors of the districts and they are awaited.